தி இந்து

தமிழால் இணைவோம்

# சுகாதாரத்துறையில் வேலைவாய்ப்பு அளிக்கும் கல்வி ஆலோசனை

சங்கர நேத்ராலாயா அகாடமி சார்பில் அறிவியல் பிரிவில் +2 முடித்த மாணவர்களுக்கு சுகாதாரத்துறையில் வேலைவாய்ப்பு அளிக்கும்.கல்வி ஆலோசனை முகாம் அம்பத்தாரில் 13.06.2015 அன்று நடந்தது.

இதில் பேசிய சங்கர நேத்ராலயா அகாடமியின் துணை பதிவாளர் திரு மகாலிங்கம் அவர்கள் இந் நிறுவனத் தலைவர் பத்ம பூஷன் மருத்துவர் பத்ரிநாத் அவர்களின் வழிகாட்டலின்படி இக்கல்லுரியில் ஏற்படுத்தப்பட்டுள்ள கல்வி வசதிகளையும் பல்கலைக் கழக அங்கீகாரங்களையும் பற்றி எடுத்துரைத்தார்.

இப்பரந்த உலகில் பார்வையிழப்பு என்னும் சுமையை மிக அதிக அளவில் தாங்கிக் கொண்டிருக்கும் தேசம் நமது தேசம். சுமார் 120 கோடி மக்கள்தொகை கொண்ட நம் தேசத்தில் பார்வைக்குறைபாடு உடைய மக்கள் சுமார் 42 சதவீதம். இவர்களில் பலரும் தங்களுக்கு அப்படி ஒரு குறைபாடு இருப்பதையே தெரியாதவர்களாக, இருக்கிறார்கள் என்பது தான் மிகவும் அதிர்ச்சி அடைய வைக்கும் உண்மை. அதேநேரத்தில் இந்த குறையை கண்டறிந்து தேவையான சேவையை வழங்கி, கண் பார்வையை மீட்டுத்தரக்கூடிய, அல்லது கண் பார்வையை திருத்தியமைத்துக் கொள்ளக்கூடிய, அல்லது அல்லது இருக்கின்ற பார்வையை தக்கவைத்துக் கொள்ள்க்கூடிய சேவையை வழங்கும் மனித வளம் தேவையான அளவு இல்லை என்பதும் நிதர்ச்சனமான உண்மை.

அந்த வகையில் மனிதனின் கண் பார்வையைக் காத்திடும் பணியில் கண் மருத்துவத்துறையில் கல்வி பயில்வதன் மூலம் ஒரு பிரகாசமான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு

அதிகமாக இருக்கிறது.உலகில் கடைசி மனிதன் இருக்கும் வரை மருத்துவத்துறையில் வாய்ப்பு எப்போதும் இருந்து கொண்டேதான் இருக்கும். அது போல கடைசி மனிதனுக்கு கண் உள்ளவரை கண் மருத்துவத்துறையில் வாய்ப்பு தொடர்ந்து கொண்டே தான் இருக்கும். அதிலும் அறிவியல், தகவல், தொழில் நுட்பம் என்று மனிதனின் கற்றுக்கொள்ளும் செயல்பாட்டிலும், மனிதனின் கண்கள் சுமார் 80 சதவீதம் முக்கிய பங்கு வகிக்கிறது. அந்த வகையில் கண் மருத்துவத்தில் வேலை வாய்ப்புகள் கொட்டிக்கிடக்கின்றது என்பதில் சந்தேகமேயில்லை.அதிலும் கேப்பிட்டேஷன் ஃபீ அதாவது நன்கொடை ஏதுமேயில்லாமல், நமது மதிப்பெண்களை மட்டுமே ஒரு விசிட்டிங் கார்டாகக் கொண்டு, அதனை முக்கியமான அடையாளமாகக் கொண்டு தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், ராஜஸ்தானின், பிலானியில் உள்ள உலகப்புகழ் பெற்ற பிர்லா இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி அண்ட் சயின்ஸ் வழங்கும் டிப்ளமோ, டிகிரி, போஸ்ட் கிராஜுவேஷன் படிப்பதற்க்கான வாய்ப்புகள் இந்த தமிழகத்தில் கிடைக்கின்றது என்பது மிகவும் மகிழ்ச்சியான செய்தியே ஆகும்.

சென்னையில் உள்ள சங்கர நேத்ராலயாவின் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு அங்கமான தி சங்கர நேத்ராலயா அகாடெமி கண் மருத்துவத்துறையில் பல்வேறு டிப்ளமோ, டிகிரி மற்றும் பட்டமேற்படிப்புகள் படிப்பதற்கான வாய்ப்புகள் இந்த தமிழகத்தில் கிடைக்கின்றது என்பது மிகவும் மகிழ்ச்சியான செய்தியே ஆகும்.

சென்னையில் வானகரத்தில் உள்ள, சங்கர நேத்ராலயாவின் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு அங்கமான தி சங்கர நேத்ராலயா அகாடெமி கண் மருத்துவத்துறையில் பல்வேறு டிப்ளமோ மற்றும் பட்டப்படிப்புகளை வழங்குகிறது.இங்கு ஹாஸ்டல் வசதியும் உள்ளது.

**பி.எஸ்சி மெடிக்கல் லேப் டெக்னாலஜி (BSc MEDICAL LAB TECHNOLOGY)**

இது தி தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் வழங்கும் மூன்று வருட பட்ட படிப்பாகும். ப்ளஸ் 2-வில் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் படித்தவர்கள் மதிப்பெண், நுழைவுத்தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இந்தப் படிப்பினை படித்தவர்கள் மருத்துவமனைகளில் மெடிக்கல் லேப் டெக்னீஷியன்களாகவும், மருந்து கம்பெனிகளில் மெடிக்கல் லேப் டெக்னீஷியன்களாகவும் பணியாற்றுகிறார்கள். மேலும், பிஎஸ்.சி. முடித்தவர்கள் எம்.எஸ்.எல்.டி மற்றும் பி.எச்டி படிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அவற்றை முடித்தவர்கள் பன்னாட்டு மருந்து நிறுவனங்களில் அறிவியலறிஞர்களாகவும், வல்லுநர்களாகவும், பல்கலைக்கழகங்களில் கல்விப்பணி மற்றும் ஆராய்ச்சிகளில் சிறப்பாக சேவை செய்து வருகிறார்கள்.

**டிப்ளமோ இன் ஆப்தால்மிக் நர்சிங் அஸிஸ்டெண்ட் (DIPLOMA IN OPHTHALMIC NURSING ASSISTANCE):**

தி தமிழ் நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் வழங்கும் இரண்டு வருட பட்டய படிப்பாகும். ப்ளஸ் 2 வில் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் படித்தவர்கள் மதிப்பெண், நுழைவுத்தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இந்தப் படிப்பினை படித்தவர்கள் கண் மருத்துவமனைகளில் கண் மருத்துவ உதவியாளர்களாகவும், வார்டுகளிலும் ஆபரேஷன் தியேட்டர்களிலும் கண் மருத்துவர்களுக்கு உதவியாளர்களாகவும் பணியாற்றுகிறார்கள். இந்தப் படிப்பினை முடித்தவர்கள் இந்தியா முழுவதிலும் உள்ள கண் மருத்துவ மனைகளிலும், சிலர் வெளிநாடுகளில் உள்ள கண் மருத்துவமனைகளிலும் பணியாற்றி வருகிறார்கள்.

தி தமிழ் நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் வழங்கும் இரண்டு வருட பட்டய படிப்பாகும். ப்ளஸ் 2-வில் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் படித்தவர்கள் அவர்களது மதிப்பெண் மற்றும் நேர்முகத்தேர்வு அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இந்தப் படிப்பினை படித்தவர்கள் கண் மருத்துவமனைகளில் மட்டுமல்லாது பொதுவாக அனைத்து மருத்துவமனைகளிலும் ஆபரேஷன் தியேட்டர்களில் ஆபரேஷன் தியேட்டர் உதவியாளர்களாகவும், ஆபரேஷன் தியேட்டர் டெக்னீஷியன்களாகவும், மயக்க மருந்தியல் நிபுணர்களுக்கு உதவியாளர்களாகவும் பணியாற்றுகிறார்கள். இந்த படிப்பினை முடித்தவர்கள் இந்தியா முழுவதிலும் உள்ள கண் மருத்துவ

மனைகளிலும், சிலர் வெளிநாடுகளில் உள்ள கண் மருத்துவமனைகளிலும் பணியாற்றி வருகிறார்கள்.

**பி.எஸ்சி ஆப்தால்மிக் டிஸ்பென்சிங் (DIPLOMA IN REFRACTION AND DISPENSING):**

சேலம், பெரியார் பல்கலைக்கழகம் வழங்கும் 4 வருட பட்டப்படிப்பாகும். ப்ளஸ் 2-ல் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் படித்தவர்கள் மதிப்பெண், நுழைவுத்தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இந்த படிப்பினை படித்தவர்கள் கண் மருத்துவமனைகளில் ரெ்ஃப்ராக் ஷனிஸ்ட்களாகவும், கண் மருத்துவமனைகளில் பல்வேறு உட்பிரிவுகளில் உதவியாளர்களாகவும் பணியாற்றுகிறார்கள். சங்கர நேத்ராலயாவில் இந்த படிப்பினை படிப்பவர்கள் கண்ணாடிக்கடைகளில் உதவியாளர்களாகவும்,

கஸ்டமர் ரிலேஷன் அதிகாரிகளாகவும் பணியாற்றவும் சொந்தமாக கண்ணாடிக்கடைகளை தொடங்கி சுயதொழில் செய்யவும் வாய்ப்பு இருக்கிறது.இந்த படிப்பில் அசோஷியேஷன் ஃபார் பிரிட்டிஷ் ஆப்தால்மிக் டிஸ்பென்சிங் அங்கீகாரமும் கிடைத்திருப்பதால், வெளிநாடுகளில் உள்ள கண்ணாடிக்கடைகளிலும், கண் மருத்துவ மனைகளிலும் வேலைவாய்ப்புகள் மிக அதிகமாக இருக்கின்றது.

## பி.பி.ஏ. மருத்துவமனை மேலாண்மை:

இதுவும் ஹிந்துஸ்தான் பல்கலைக்கழகம் வழங்கும் மூன்று வருட பட்டப்படிப்பாகும். மருத்துவமனை நிர்வாகம், மருத்துவமனை மேலாண்மை, மருத்துவமனை கணக்குப் பதிவியல், மார்க்கெட்டிங், ஹெல்த் இன்ஸ்யூரன்ஸ்,மருத்துவ தர மேலாண்மை/தரக்கட்டுப்பாடு போன்ற துறைகளில் வேலைவாய்ப்பினை அளிக்கக்கூடிய படிப்பாகும்.

.

அந்த வகையில் பார்வையிழப்பு என்னும் பிரச்னைக்கு எதிராகச் செயல்படுவதற்க்கான ஒரு படையினை தயார் செய்யும் வகையில் கண் மருத்துவம் சார்ந்த படிப்புகள் ஒரு வலிமையான

பாரதத்தினை உருவாக்க முனைந்துள்ளது என்பது மட்டுமல்லாமல், வேலை வாய்ப்பு மட்டுமல்லாது சுய தொழில் வாய்ப்புக்கும் வழி வகுத்துத் தருகிறது என்பது உண்மை.

மேலும் சங்கர நேத்ராலயா அகாடெமியில் தகுதியும், திறமையும் வாய்ந்த ஏழை எளிய மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையும் வழங்கப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மேற்குறித்த அனைத்து படிப்புகளுக்கும் ப்ளஸ் 2 படித்து விட்டு எதிர்காலம் குறித்த கேள்விகளோடு இருப்பவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாகும். மேலும் விவரங்களுக்கு www.thesnacademy.ac.in என்ற வலைத்தளத்தையோ அல்லது mahali@snmail.org என்கிற மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொள்ளலாம்

****************************************